``````````````15.07.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணை நீர்மட்டம் 47.53 அடியாக உயர்வு

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 47.53 அடியாக உயர்ந்துள்ளது.

காவிரியில் தண்ணீர் திறக்கப்பட்டதாலும், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாகவும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. புதன்கிழமை மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 6,352 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து, வியாழக்கிழமை காலை வினாடிக்கு 6,375 கன அடியாக அதிகரித்துள்ளது. நீர்வரத்து அதிகரித்து வருவதால், புதன்கிழமை காலை 46.92 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 47.53 அடியாக உயர்ந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக விநாடிக்கு 2,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. நீர் இருப்பு 16.29 டி.எம்.சி.

### முல்லைப் பெரியாறு அணையிலிருந்து முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறப்பு


``````````````

முல்லைப்பெரியாறு அணையிலிருந்து தமிழகப்பகுதி முதல்போக பாசனத்திற்காக வியாழக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 14,707 ஏக்கர் முதல் போக சாகுபடிக்கு ஜூன் முதல் நாள் பெரியாறு அணையிலிருந்து தண்ணீர் திறப்பது வழக்கம். இந்த ஆண்டு பருவமழை ஏமாற்றியதால் தண்ணீர் திறப்பதில் தாமதமேற்பட்டது. முதல்போக விவசாயத்திற்கு தண்ணீர் திறக்க விவசாயிகள் வலியுறுத்தி வந்தனர். இதையடுத்து முல்லைப் பெரியாறு அணையிலிருந்து தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் உத்தரவிட்டார்.

இதைத்தொடர்ந்து முல்லைப் பெரியாறு அணையிலிருந்து விவசாயத்திற்காக தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி, தேக்கடியில் தமிழக பொதுப்பணித்துறை அலுவலகம் அருகே உள்ள மதகு பகுதியில் நடைபெற்றது. முன்னதாக விவசாய சங்கத்தின் சார்பாக விவசாயம் செழிக்க மும்மத பிரார்த்தனை நடத்தப்பட்டது. தேனி மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாச்சலம், சுரங்க வாய்க்கால் பகுதியிலுள்ள மதகினை இயக்கி, வினாடிக்கு 300 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விட்டார். சட்டப் பேரவை உறுப்பினர்களான தங்க.தமிழ்செல்வன், எஸ்.டி.கே.ஜக்கையன், டாக்டர் கதிர்காமு மற்றும் விவசாயிகள் தமிழகப்பகுதிக்கு வரும் தண்ணீரில் மலர்தூவினர்.

மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாச்சலம் செய்தியாளர்ளிடம் கூறியது: முதல்வரின் உத்தரவின் பேரில், பெரியாறு அணையிலிருந்து, முதல்போக விவசாயத்திற்காக வியாழக்கிழமை முதல் 120 நாள்களுக்கு 300 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. விவசாயிகள் குறுகிய கால பயிர்களை நடவு செய்து, தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். மேலும் பருவமழை தவறி பெரியாறு அணைக்கு போதுமான நீர்வரத்து இல்லை எனில் நீர் இருப்பை கணக்கில் கொண்டு முறைபாசனம் தேவைக்கு ஏற்ப அமல்படுத்தப்படும் என்றார். நிகழ்ச்சியில், கூடலூர் நகர்மன்ற தலைவர் அருண்குமார், அணை பொறியாளர்கள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வியாழக்கிழமை நிலவரப்படி பெரியாறு அணையின் நீர்மட்டம் 119.20 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1,148 கனஅடியாகவும், அணையிலிருந்து நீர் வெளியேற்றம் வினாடிக்கு 300 கனஅடியாகவும் இருந்தது. அணையின் மொத்த நீர் இருப்பு 2,484 மில்லியன் கன அடியாக இருந்தது.

**காரீஃப் பருவ சாகுபடிக்காக 20 லட்சம் டன் யூரியா இறக்குமதி**

காரீஃப் பருவ சாகுபடி தேவைகளுக்காக 20 லட்சம் டன் யூரியாவை வெளிநாடுகளில் இருந்து மத்திய அரசு இந்த மாத இறுதியில் இறக்குமதி செய்யவுள்ளது.

இந்தியாவில் தேவைக்கு குறைவாகவே யூரியா உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் யூரியாவை நம்பியே இந்தியா உள்ளது. இதுபோன்ற இறக்குமதியை பொதுத் துறை நிறுவனங்களான எஸ்டிசி, எம்எம்டிசி, ஐபிஎல் ஆகியவைகளின் மூலம் மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், தில்லியில் மத்திய ரசாயன அமைச்சகத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் பிடிஐ செய்தியாளரிடம் புதன்கிழமை கூறியதாவது:

இந்த காரீஃப் பருவ சாகுபடிக்காக நமக்கு 25 லட்சம் டன் யூரியா தேவைப்படுகிறது. இதையடுத்து, 20 லட்சம் டன் யூரியாவை இறக்குமதி செய்வதென அரசு முடிவெடுத்தது. அதன்படி, வெளிநாடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட 20 லட்சம் டன் யூரியா இந்த மாத இறுதியில் இந்தியத் துறைமுகங்களை வந்தடையும். எஞ்சிய 5 லட்சம் டன் யூரியாவை இறக்குமதி செய்வது தொடர்பான ஒப்பந்தபுள்ளி (டெண்டர்) விரைவில் கோரப்படும். நமது நாட்டின் ஒட்டுமொத்த யூரியா இறக்குமதி விகிதம் இந்த ஆண்டு குறைந்துள்ளது. அதாவது, கடந்த 2015-ஆம் ஆண்டில் 85 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால், 2016-17ஆம் நிதியாண்டில் 70 லட்சம் டன் மட்டுமே இறக்குமதி செய்யப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது என்றார் அவர்.

மத்திய ரசாயனத் துறை அமைச்சர் அனந்த் குமார் செய்தியாளர்களிடம் கடந்த மாதம் பேசியபோது, 2016-17ஆம் நிதியாண்டில் உள்நாட்டில் தயாரிக்கப்படும் யூரியாவின் அளவு 255 லட்சம் டன்னாக உயர்ந்து சாதனை படைத்துள்ளதாகவும், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10 லட்சம் டன் அதிகம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் மிகக் குறைந்த விலை உரமாக யூரியா திகழ்கிறது. அதன் விலை, டன் ஒன்றுக்கு ரூ.5,360-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

யூரியா தயாரிப்புக்கான செலவு, விற்பனைத் தொகை ஆகியவைகளுக்கு இடையே நிலவும் தொகையை மத்திய அரசால் மானியமாக அளிக்கப்பட்டு வருகிறது.

**லாபம் தரும் கன்று வளர்ப்பு!**




கன்றுகளுக்கு முறையான தொடக்க தீவனமிடுதலும் பராமரிப்பும் அதன் ரூமென் எனப்படும் அசையூன் இரைப்பை வளர்ச்சிக்கு உதவுகிறது. இந்த அசையூன் இரைப்பையின் வளர்ச்சியே பெண் கன்றுகளின் பிற்கால இனப்பெருக்க வயதை குறைத்து அதிக லாபம் ஈட்ட காரணமாகிறது.

கன்றுகள் பிறக்கும்போது அதன் அசையூன் இரைப்பை வளர்ச்சி அற்றதாக இருக்கும். அந்த சமயத்தில் பால் மட்டுமே அதற்கு முழு உணவாகும். பால் திரவ உணவாக இருப்பதால் உணவுக் குழாய்க்குரிய பள்ளம் (உணவுக்குழாயையும் செரிமான இரைப்பையையும் இணைக்கும் குழாய்) வழியாக எளிதில் அசையூன் இரைப்பையைக் கடந்து செரிமான இரைப்பையை சென்றடைகிறது. எனவே கன்று பாலை மட்டும் தன் முழு உணவாக உட்கொள்ளும் வரையில் அதன் அசையூன் இரைப்பை வளர்ச்சி பெறாது.

இரைப்பையின் வளர்ச்சி: அசையூன் இரைப்பையின் வளர்ச்சிக்கு முக்கியக் காரணிகளாக விளங்குபவை அசையூன் இரைப்பை நுண்ணுயிரிகளும் அதற்குத்

தேவையான ஈரப்பதமும், அசையூன் நுண்காம்பும் அதன் உறிஞ்சும் தன்மையும் மற்றும் நிலை மாறும் கொழுப்பு அமிலம்.

நுண்ணுயிரிகள்: கன்றின் பிறப்பில் அவற்றின் அசையூன் இரைப்பையில் நுண்ணுயிரிகள் இருப்பதில்லை. மாறாக தண்ணீர் அல்லது தொடக்க தீவனம் மூலமாக அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த நுண்ணுயிரிகள் தனக்குத் தேவையான ஈரப்பதத்தை நீரிலிருந்து எடுத்துக்கொண்டு அசையூன் நுண்காம்பின் வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

நுண்காம்பின் முக்கியத்துவம்: நுண்காம்பானது, விரல் போன்ற மெல்லிய உறிஞ்சும் தன்மை கொண்ட ஒரு அமைப்பு. இது அசையூன் இரைப்பையின் மேற்பரப்பில் பரவலாகக் காணப்படும். இந்த நுண்காம்பு உணவிலிருக்கும் அனைத்து ஊட்டச்சத்தையும் உடலுக்கு முறையாக கடத்துகிறது. இவ்வாறு கன்றின் இளவயதில் முறையாக எடுத்துக் கொள்ளப்படும் சத்தானது கன்றின் பிற்கால இனப்பெருக்க வயதை குறைக்கிறது.

நீர்: கன்று பிறந்த மூன்றாவது நாளில் இருந்தே நீரானதை தவறாமல் வழங்க வேண்டும். நீர், அசையூன் இரைப்பையில் உள்ள நுண்ணுயிரிகளுக்கும், நுண்காம்பு வளர்ச்சிக்கு முக்கியக் காரணியாக அமைகிறது.

நிலைமாறும் கொழுப்பு அமிலம்: கன்று தீவனம் எடுக்க துவங்கியதும், நுண்ணுயிரிகள் அந்தத் தீவனத்தை செரித்து, அதிலிருந்து ஊட்டச்சத்தையும், நிலைமாறும் கொழுப்பு அமிலத்தையும் வழங்குகிறது. இந்த நிலை மாறும் கொழுப்பு அமிலத்தை அசிடேட், பூயூட்டிரேட் மற்றும் ப்ரோபயனட் என மூன்றாகப் பிரிக்கலாம்.

இவற்றில் கன்று தீவனத்திலிருந்து பெறப்படும் பூயூட்டிரேட், அசையூன் இரைப்பை மற்றும் அதன் நுண்காம்பின் வளர்ச்சியை அதிகரிக்கிறது. மாறாக புற்களிலிருந்து பெறப்படும் அசிடேட் அசையூன் இரைப்பை மற்றும் அதன் நுண்காம்பின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கிறது. எனவே கன்று பிறந்தது முதல் இரண்டு மாதங்களுக்கு புற்களை தவிர்த்தல் நல்லது.

தொடக்கத் தீவனம் கொடுக்கும் முறை: கன்று பிறந்த மூன்றாவது நாளில் பாலும் அதனுடன் சேர்த்து 100 கிராம் அளவு தீவனமும், தேவையான அளவு நீரும் வழங்க வேண்டும். ஆரம்பத்தில் கன்று குறைந்த அளவே தீவனம் எடுக்கும்.

தொடர்ந்து தீவன அளவை சிறிது சிறிதாக அதிகப்படுத்த வேண்டும். கன்று தன் ஆறு வார வயது காலத்தில் நாள் ஒன்றுக்கு 900 முதல் 1000 கிராம் அளவு தீவனம் எடுக்க துவங்கும். அச்சமயத்தில் கன்றை பால் மறக்க செய்ய வேண்டும்.

அதிக தரமுள்ள, 16-20 புரதச்சத்து நிறைந்த, சுவையான தீவனத்தை வழங்குதல் அவசியம். சுவைக்காக வெல்லப்பாகு சேர்க்கலாம். இறுதியாக தீவன துணைமம் சேர்த்தல் ஓரணு ஒட்டுண்ணி நோயை தவிர்க்க உதவுகிறது.

பெண் கறவைக் கன்றுகளை குறைந்த செலவில் பராமரிக்கவும், பிற்காலத்தில் அதிக லாபம் ஈட்டவும் கன்று தொடக்கத் தீவனம் மற்றும் தேவையான அளவு நீர் வழங்குதல் மிகவும் அவசியம்.

இத்தகவலை கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறை டாக்டர் மு.செந்தில்நாதன், உணவியல் துறை நிபுணர் அ.ரமாதேவி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## துவரையில் நாற்று நடவு தொழில்நுட்பங்கள்



துவரை சாகுபடியில் விவசாயிகள் நாற்று நடவு முறை தொழில்நுட்பங்களைக் கடைபிடித்தால் கூடுதல் மகசூல் பெறலாம் என்று தருமபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பெ.பாஸ்கர் கூறினார்.

இதுகுறித்து, அவர் கூறும் வழிமுறைகள்: மண் வளத்தைப் பாதுகாப்பதில் துவரை சாகுபடி முக்கியப் பங்கு வகிக்கிறது. துவரை பயிர், தனது சாகுபடி பருவத்தில் ஏக்கருக்கு சுமார் 8 கிலோ தழைச்சத்தை மண்ணில் சேர்க்கிறது. அறுவடைக்குப்பின் இப் பயிரின் வேர்ப் பகுதிகள், உதிர்ந்த இலைகள் மண்ணின் பெ்திக மற்றும் ரசாயனத் தன்மைகளை மேம்படுத்துகிறது.

துவரைப் பயிர் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் உழவியல் தொழில்நுட்பங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இப்பயிரை, தனிப் பயிராகவும், கலப்புப் பயிராகவும், ஊடுபயிராகவும் பயிரிடலாம்.

தற்போது, பருவமழை ஜூன் மாதத்தில் தொடங்க தாமதமாவதால், சாகுபடி பணிகள் ஜூலை மாதத்தில் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இவ்வாறு, விதைப்பு தாமதமாவதால், இப் பயிரில் பூச்சி நோய் தாக்குதல் அதிகரித்து உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

இதனடிப்படையில், துவரையில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு நாற்று நடவு முறை பரிந்துரைக்கப்படுகிறது.

நாற்றங்கால் தயாரிப்பு: இப் பருவத்துக்குப் பரிந்துரைக்கப்படும் கோ(ஆர்.ஜி.) 7, எல்ஆர்ஜி.41, வம்பன் 2, 3, பி.எஸ்.ஆர்.1 போன்ற ரகங்களைத் தேர்வு செய்ய வேண்டும். துவரை நடவுமுறை சாகுபடிக்கு ஏக்கருக்கு ஒரு கிலோ விதை போதுமானது. ஒரு கிலோ விதையுடன் 2 கிராம் கார்பன்டாசிம் அல்லது 2 கிராம் திரம் அல்லது 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி என்ற அளவில் விதை நேர்த்தி செய்து 24 மணி நேரத்துக்குப் பின், ரைசோபியம் மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் கொண்டு விதை நேர்த்தி செய்து நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும்.

மணல், மண், எரு ஆகியவற்றை சம அளவில் கலந்து 200 மைக்ரான் உள்ள 6-க்கு 4 அளவுள்ள பாலிதீன் பைகளில் நிரப்பி, விதைப்புக்குப் பயன்படுத்த வேண்டும். பைகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்க 4 துளைகள் போடலாம். பின்பு விதைநேர்த்தி செய்த விதைகளை ஒரு பைக்கு ஒரு விதை என்ற அளவில் 1 செ.மீ. ஆழத்தில் விதைத்து, ஒவ்வொரு நாளும் தண்ணீர் தெளித்து பாதுகாக்க வேண்டும். இவ்வாறு விதைப்பு செய்யப்பட்ட பைகளை நிழலான இடங்களில் வைத்து 30-40

நாள்கள் பராமரிக்கப்பட வேண்டும். நடுவதற்கு சில நாள்கள் இளம் வெயிலில் நாற்றுக்களை வைத்து கடினப்படுத்தி பின்பு நடவு செய்யலாம்.

நடவு செய்தல்: தனிப் பயிர் சாகுபடிக்கு 15 செ.மீ. அளவுள்ள குழிகளை 5-க்கு 3 அடி என்ற இடைவெளியிலும் (2904 பயிர்/ஏக்கர்), ஊடுபயிர் சாகுபடிக்கு 6-க்கு 3 அடி என்ற இடைவெளியிலும் (2420 பயிர்/ஏக்கர்) எடுக்க வேண்டும்.

நாற்றுகளை நடுவதற்கு 15 நாள்களுக்கு முன் குழிகளை மண் எருவைக் கொண்டு நிரப்பி வைக்க வேண்டும். இதைத் தொடர்ந்து, ஒரு குழிக்கு ஒரு செடி வீதம் நடவு செய்து, உடன் நீர்ப் பாசனம் மேற்கொள்ளப்பட வேண்டும். பின்னர், மண்ணின் ஈரப் பதத்துக்கு ஏற்ப 3-4 முறை பாசனம் மேற்கொள்ளலாம். நடவு செய்த 30-40 நாள்கள் வரை களையின்றி பராமரிக்க வேண்டும்.

நடவு செய்த 20-30 நாள்கள் கழித்து மண் அணைப்பதற்கு முன், மானாவாரி சாகுபடியாக இருந்தால் ஏக்கருக்கு 11 கிலோ யூரியா, 62 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 8 கிலோ பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். இறவைப் பயிராக இருந்தால் ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 124 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 16 கிலோ பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். மேலும், ஏக்கருக்கு 4 கிலோ துத்தநாக சல்பேட் நுண்ணூட்டத்தை செடியைச் சுற்றி இடுவதால், அதிக விளைச்சல் கிடைக்கும். நடவு செய்த 20-30 நாள்கள் கழித்து 5-6 செ.மீ. அளவுக்கு குருத்தைக் கிள்ளிவிடுவதால், பக்க கிளைகள் அதிகரித்து கூடுதல் விளைச்சல் கிடைக்கும்.

நடவு முறை சாகுபடியின் நன்மைகள்: நடவு முறையில் மழை தாமதமானாலும் குறித்த பருவத்தில் பயிர் செய்ய முடியும். அதிக ஆழத்தில் செய்யப்படுவதால் வேர் வளர்ச்சி அதிகமாவதோடு, பயிர் வறட்சியைத் தாங்கி வளரும். வரிசை நடவு முறையில் செய்யப்படுவதால், பயிர்ப் பாதுகாப்பு முறைகளை எளிமையாகவும் திறம்படவும் மேற்கொள்ள முடியும். கணிசமான அளவுக்கு விதை சேமிப்பு செய்ய முடிகிறது. பயிர்களுக்கு சரியான அளவு இடைவெளி மற்றும் போதிய அளவு நீர்ப் பாசனம் அளிப்பதால், நிலம், காற்று, ஈரப்பதம் மற்றும் பயிர் சத்துகள் ஆகியவை சரிவிகிதத்தில் பயிருக்குக் கிடைப்பதால், பயிர் மகசூல் அதிகரிக்கிறது. பக்கவாட்டுக் கிளைகள் அதிக அளவில் உருவாவதன் மூலம் அதிகக் காய்கள் உற்பத்தியாகி, மகசூல் அதிகரிக்கிறது. எனவே, நாற்று நடவு முறையில் இந்த

வழிமுறைகளைப் பின்பற்றினால் துவரை சாகுபடி செய்து அதிக விளைச்சலைப் பெற்று லாபம் அடையலாம் என்றார்.

## பரமத்திவேலூர் ஏல மையத்துக்கு கொப்பரைத் தேங்காய் வரத்து அதிகரிப்பு

பரமத்திவேலூரில் உள்ள சேலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு கொப்பரை தேங்காய் வரத்து அதிகம் இருந்தது. மேலும் கொப்பரைத் தேங்காயும் அதிக விலைக்கு விற்பனையானது.

பரமத்தி வேலூர் வட்டத்தில் சோழசிராமணி, ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இங்கிருந்து பரமத்திவேலூர், வெங்கமேட்டில் உள்ள சேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கொப்பரைத் தேங்காய் கொண்டு வரப்படுகிறது.

கடந்த வாரம் வியாழக்கிழமை ரம்ஜான் பண்டிகையையொட்டி இங்கு ஏலம் நடைபெறவில்லை. இதனால் இந்த வார வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 3 ஆயிரத்து 6 கிலோ கொப்பரை தேங்காய்கள் கொண்டு வரப்பட்டிருந்தன. இதில், அதிகபட்சமாக கிலோ ஒன்று ரூ.47.39-க்கும், குறைந்தபட்சமாக ரூ.45.69-க்கும், சராசரியாக ரூ.46.59-க்கும் ஏலம் போனது. கடந்த வாரம் ஏலம் நடைபெறாததால் கொப்பரைத் தேங்காய் வரத்து அதிகரித்ததோடு, கூடுதல் விலைக்கு ஏலம்போனது.

## நாமக்கல் மாவட்டத்தில் 827 கிலோ கொப்பரை கொள்முதல்

நாமக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 827 கிலோ கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகளிடமிருந்து கொப்பரைத் தேங்காயினைக் கொள்முதல் செய்ய கொப்பரைக் கொள்முதல் திட்டம் கடந்த மாதம் 15-ஆம் தேதி தொடங்கப்பட்டது. நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு

விற்பனைச் சங்க கொள்முதல் மையம் மல்லசமுத்திரத்திலும், நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க கொள்முதல் மையம் பரமத்தி வேலூரிலும், ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க கொள்முதல் மையம் ராசிபுரத்திலும் செயல்பட்டு வருகின்றன.

கொப்பரை வைத்துள்ள தென்னை விவசாயி, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர் மூலம் தென்னை விவசாயி என்ற சான்றிதழைப் பெற்று அவர்களுக்கான கொள்முதல் மையத்தில் ஒரு நாளைக்கு ரூ.2,500 கிலோ வரை கொப்பரையை விற்பனை செய்யலாம்.

மல்லசமுத்திரம் கொள்முதல் மையம் சனிக்கிழமை, பரமத்திவேலூர் கொள்முதல் மையம் செவ்வாய்க்கிழமை, ராசிபுரம் மையம் வெள்ளிக்கிழமையும் நடைபெற்று வருகின்றன. காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை கொள்முதல் செய்யப்படும்.

இம் மையங்களில் அரசு ஆதரவு விலையாக ஒரு கிலோ அரவைக்

கொப்பரைக்கு ரூ.59.50-ம், ஒரு கிலோ பந்துக் கொப்பரைக்கு ரூ.62.40-ம் வழங்கப்பட்டு வருகின்றன. நாமக்கல் மாவட்டத்தில் இதுவரை ரூ.49,000 மதிப்புள்ள 827 கிலோ கொப்பரை தேங்காயை விவசாயிகள் இந்தக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் விற்று பயன் பெற்றுள்ளனர்.

கொப்பரை விற்பனை செய்த விவசாயிகளுக்கு விற்பனைத் தொகை மூன்று நாள்களுக்குள் காசோலை அல்லது மின்னணு நிதி பரிமாற்றம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத் திட்டம் 180 நாள்களுக்கு அதாவது 2017-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதி வரை செயல்பாட்டில் இருக்கும்.

இதனால், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தென்னை விவசாயிகள், கொள்முதல் மையங்களில் அரசின் ஆதரவு விலை திட்டத்தின் கீழ் கொப்பரையை விற்பனை செய்து பயனடையலாம்.

## பட்டுக்கோட்டையில் 50 டன் கொப்பரை கொள்முதல்:மண்டல இணைப் பதிவாளர் தகவல்

பட்டுக்கோட்டையில் தொடங்கப்பட்டுள்ள கொப்பரை கொள்முதல் நிலையத்தில் இதுவரை 50 டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் எஸ். சுப்பிரமணியன் தெரிவித்தார்.

பேராவூரணி பகுதி தென்னை விவசாயிகள் பயனடையும் வகையில் பேராவூரணியில் கொப்பரை கொள்முதல் நிலையம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

விழாவுக்கு பேராவூரணி சட்டப்பேரவை உறுப்பினர் மா. கோவிந்தராஜன் தலைமை வகித்தார். பட்டுக்கோட்டை சட்டப்பேரவை உறுப்பினர் சி.வி. சேகர் முன்னிலை வகித்தார். கொப்பரை கொள்முதல் நிலையத்தை தொடங்கி வைத்து தஞ்சை மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் எஸ். சுப்பிரமணியன் பேசியது:

கொப்பரை கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்ட பின்னர் இதுவரை வெளிமார்க்கெட்டில் 48 ரூபாய் விற்ற கொப்பரை 58 ரூபாய்க்கு விலைபோனது. கூட்டுறவு சங்கங்கள் கொள்முதலை தொடங்கும் போதெல்லாம் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பது வழக்கம். கடந்த மாதம் பட்டுக்கோட்டையில் திறக்கப்பட்ட கொள்முதல் நிலையத்தின் மூலம் இதுவரை 50 டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பேராவூரணி கொள்முதல் நிலையம் புதன், வியாழன், வெள்ளி ஆகிய 3 நாட்கள் செயல்படும். இந்த பகுதி தேங்காய் விளைச்சல் அதிகம் உள்ள பகுதி. 2013-ம் ஆண்டு கொள்முதல் நிலையம் தொடங்கப்பட்டபோது 8 ஆயிரம் டன் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த பகுதி தென்னை விவசாயிகள் உரிய சான்றுகளை பெற்று கொள்முதல் நிலையத்தை பயன்படுத்தி பயனடைய வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் ஒன்றியக்குழுத் தலைவர் சாந்திஅசோக்குமார், மாநில கயிறு வாரியத் தலைவர் நீலகண்டன், நகரச் செயலர் வி.என். பக்கிரிசாமி, கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் ஆர்.பி. ராஜேந்திரன்,

கூட்டுறவு வீட்டு வசதி வாரிய சங்கத் தலைவர் எஸ்.எம். நீலகண்டன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வேளாண்மை விரிவாக்க சேவைப் படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

இடுபொருள் விற்பனையாளர்களுக்கான வேளாண்மை விரிவாக்கச் சேவை பட்டயப்படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர்

என். சுப்பையன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது:

வேளாண்மை இடுபொருள் விற்பனையாளர்களுக்காக வேளாண்மை விரிவாக்கச் சேவை பட்டயப்படிப்பைத் தேசிய வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிறுவனம் நடத்துகிறது. வேளாண் இடுபொருள்

வணிகர்களைத் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தும் விதமாக மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளோடு இப்படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மை இடுபொருள்

விற்பனையாளர்களாக தற்போது செயல்பட்டு வரும் 10-ம் வகுப்பு படித்தவர்கள் இப்பட்டய பயிற்சியைப் பெறலாம். இப்பயிற்சி ஒரு மாவட்டத்துக்கு ஒரு அணிக்கு 40 - 50 வேளாண் இடுபொருள்

வணிகர்கள் தேர்வு செய்யப்படுவர். இவர்களுக்கு 48 வாரங்களுக்கு 40 வகுப்புப் பயிற்சியும், 8 களப்பயிற்சியும் அளிக்கப்படும்.

இப்பயிற்சிக் கட்டணமாக ரூ. 20,000 நிர்ணயிக்கப்பட்டு, இரு வகையான மானியத்தொகை வழங்கப்படுகிறது.

மேலும், இதுதொடர்பான விவரங்களுக்கு தஞ்சாவூர் காட்டுத்தோட்டத்தில் உள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் திட்ட இயக்குநரை (அட்மா) 04362- 267679 என்ற எண்ணில் தொடர்பு

கொள்ளலாம்.

**கிசான் சுவிதா: விவசாயிகளின் நலனுக்கான மென்பொருள்:மத்திய அரசு உருவாக்கம்**

விவசாயிகள் தங்களது இருப்பிடத்திலிருந்தே தேவையான விவரங்களை எளிதில் பெறும் வகையில், கிசான் சுவிதா என்னும் மென்பொருளை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.

விவசாயத்துக்குத் தேவையான அடிப்படை தகவல்களான காலநிலை மாற்றம், மழையளவு, பருவநிலை மாற்றம், விளைபொருள்களின் சந்தை விலை விவரங்கள், தொழில்நுட்பச் செய்திகள், பயிர் பாதுகாப்பு பற்றிய விவரங்கள் உள்ளிட்டவைகளை அறிய இயலாமல் விவசாயிகள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகின்றனர். இந்த விவரங்களை அறிய பல்வேறு துறை அலுவலர்களை நேரில் சந்திக்க வேண்டியுள்ளது. இதனால் கால விரயமும், அலைச்சலும் ஏற்படுவதால், போதிய தகவல்களை பெறாமலேயே விவசாயிகள் சாகுபடியை மேற்கொண்டு, இழப்பை சந்திக்கின்றனர்.

இதனைத் தவிர்க்க மத்திய அரசு கிசான் சுவிதா என்னும் மென்பொருளை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் பல்வேறு தகவல்களை விவசாயிகள் பெற முடியும்.

பருவநிலை விவரங்கள்: விளைபொருள் விதைப்பு, பருவநிலை மாற்றம், மழைநிலவரம் ஆகிய விவரங்களை 5 நாள்களுக்கு முன்பே அறிந்துகொள்ளலாம். இதன்மூலம் தானிய இழப்பு, பணி ஆள்கள் விரயம் ஆகியவற்றை தவிர்க்க முடியும்.

இடுபொருள் விற்பனையாளர் விவரம்: விவசாயத்துக்குத் தேவையான இடுபொருள்களான விதை, உரம், மருந்து, பண்ணை கருவிகள் ஆகியவை தங்கள் வட்டாரப் பகுதியில் எங்கு கிடைக்கிறது என்ற விவரம், முகவரி, தொலைபேசி விவரம் உள்ளிட்டவற்றை பெறலாம். இதனால் வீண் அலைச்சலை தவிர்க்க முடியும்.

சந்தை விலை விவரம்: தங்களது விளைபொருள்களை அறுவடை செய்து விற்பனைக்கு எடுத்து வருவதற்கு முன்பாகவே, பல்வேறு சந்தைகளில் உள்ள அன்றாட விலை நிலவரத்தை தெரிந்துகொள்ளலாம். இதனால் விலை உயரும் நேரத்தில் விற்பனை செய்து அதிக லாபம் பெறலாம். சந்தை விலை நிலவரத்தை

பொருத்தவரை உள்ளூர் சந்தை, வட்டார, வெளி மாவட்ட, வெளி மாநில விளைபொருள்களின் விலை விவரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

பயிர் பாதுகாப்பு: அனைத்து பயிர்களுக்கான பூச்சி, நோய் தாக்குதல், அதற்கு என்ன வகையான மருந்துகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம் என்ற தகவலை பெறலாம். ஒவ்வொரு வட்டார அளவில் ஒரு விவசாய வல்லுநர், விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளிப்பர். மேலும், அவரிடமிருந்து புதிய தகவல் தொழில்நுட்பங்கள், பயிர் உற்பத்தி முறைகள் போன்றவற்றையும் அறிந்துகொள்ள முடியும்.

இதுகுறித்து நாகப்பட்டினம் விற்பனைக்குழுச் செயலர் ரா. தேவேந்திரன் கூறியது:

ஸ்மார்ட் போன் வைத்திருக்கும் விவசாயிகள் அல்லது அவரது குடும்பத்தினர் கிசான் சுவிதா என்னும் மென்பொருளை தங்களது செல்லிடப்பேசியில் பதிவிறக்கம் செய்து இந்த தகவல்களைப் பெறலாம். தற்போது தகவல்கள் ஆங்கிலத்தில் மட்டுமே தரப்படுகின்றன. விரைவில் இந்த தகவல்கள் தமிழிலும் தரப்பட உள்ளன என்றார்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மருந்துகளின் பக்கவிளைவுகள்**

மூட்டுவலி, முதுகுவலி, கீல்வாதம் போன்றவற்றுக்கு 'குளுகோசமின்' பரிந்துரை செய்யப்படுகிறது. வலிக்காக தடவப்படும் கிரீம்கள் பலவற்றில் வலி நிவாரணியாக குளுகோசமின் சேர்க்கப்படுகிறது. குளுகோசமின் வாய் வழியாக சாப்பிடப்படும் போது இதனால் ஏற்படும் பக்க விளைவுகளாக விரல்களில் மதமதப்புடன் கூடிய வீக்கம், கண்பட்டை, உதடுகளில் வீக்கம் ஆகியன உள்ளன. வலிக்காக மருந்து சாப்பிடும் நோயாளி பக்க விளைவு களைக் கண்டு பயந்து விடுகிறார். ஆரோக்கிய உணவகளை விற்கும் கம்பெனிகள் குளுகோசமினை தயாரிக்கின்றன. மருத்துவர்களின் பரிந்துரையின்றி வலியைக் குறைக்க குளுகோசமின் சாப்பிடக்கூடாது. மருத்துவரின் பரிந்துரையின்றி நிறுத்தவும் கூடாது.

## வேளாண் வர்த்தக கண்காட்சி கோவையில் இன்று ஆரம்பம்

பவானிசாகர்: கோவை, கொடிசியா வணிக வளாகத்தில், இன்று முதல், 18ம் தேதி வரை, 16வது அக்ரி இன்டெக்ஸ் எனப்படும், வேளாண் வர்த்தக கண்காட்சி நடக்கிறது. விவசாயத்துக்கு பயன்படுத்தும் பல்வேறு விதமான வேளாண்மை தொடர்பான, பொருட்களின் அரங்குகள் இதில் இடம் பெறுகின்றன. இந்திய நிறுவனங்கள் மட்டுமின்றி ஜப்பான், சீனா, இத்தாலி, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளின் நிறுவனங்களும் பங்கேற்கின்றன. கண்காட்சி நேரம் காலை, 10 மணி முதல் மாலை, 6 மணி வரை, அனுமதி இலவசம். இதில் பவானிசாகர், நம்பியூர் வட்டாரத்திலிருந்து அட்மா கிட்ட உறுப்பினர்கள் உட்பட, 50 விவசாயிகள் கலந்து கொள்கின்றனர். இதை பவானிசாகர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் உமாபதி தெரிவித்தார்.

## எம்7 பாசன விவசாயிகள் சபை பொதுக்குழு கூட்டம்

ஈரோடு: ஈரோட்டை அடுத்த கவுண்டச்சிபாளையத்தில், எம்7 பாசன விவசாயிகள் சபை பொதுக்குழு மற்றும் விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. தலைவர் குமாரசாமி தலைமை வகித்தார். கொப்பு வாய்க்காலை பாசன விவசாயிகள் பங்கு தொகையுடன், சபை நிதியில் இருந்து சீரமைக்க வேண்டும். கீழ்பவானி பாசன திட்டத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்ற, துறைக்கு சொந்தமான இடங்களை அளவீடு செய்ய, அரசு தனிக்குழு அமைக்க வேண்டும். பிற கிளை, உபகிளை வாய்க்கால்களை வரும், ஆக.,15க்குள் தூர் வார வேண்டும். பாசன சபை, பொதுப்பணிதுறை இணைந்து வாய்க்கால் பராமரிப்பு பணி செய்ய, ஹெக்டேருக்கு ஆண்டுதோறும், 100 ரூபாய் வீதம் ஒதுக்கீடு செய்ய, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கரும்பில், 100 டன் மகசூல் செய்த வெள்ளோடு விவசாயி நடராஜனுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

## கருப்பு திராட்சை விலை அதிகரிப்பு

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் வரத்து குறைவால் கருப்பு திராட்சை விலை அதிகரித்துள்ளது.

திண்டுக்கல்லில் 240 எக்டேரில் கருப்பு, பச்சை திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. மதுரை, சேலம், நெல்லை, கோவை, திருச்சி மாவட்டங்கள், பிற மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு சீசன் காலத்தில் தினமும் 50 டன் வரை கருப்பு, பச்சை திராட்சை விற்பனைக்கு வரும். திண்டுக்கல் மாவட்டத்தில் சில பகுதிகளில் தண்ணீரின்றி விவசாயம் பெரிய அளவில் பாதிப்படைந்துள்ளது.

இதனால் திராட்சை பயிரிட்ட விவசாயிகள் தண்ணீர் பற்றாக்குறையால், பயிரிடும் அளவை குறைத்து விட்டனர்.

இதனால் கருப்பு, பச்சை திராட்சை சாகுபடி வெகுவாக குறைந்தது. சென்ற மாதம் ஒரு கிலோ கருப்பு திராட்சை ரூ.70 , பச்சை திராட்சை ரூ.60 க்கு விற்றது.

தற்போது பச்சை திராட்சை சீசன் முடிந்த நிலையில், கருப்பு திராட்சை மட்டும் ஓரளவுக்கு வரத்து உள்ளது. சாகுபடி பெரியளவில் இல்லாததால் விலை தினமும் அதிகரித்தபடி உள்ளது. சென்ற வாரம் கருப்பு திராட்சை ஒரு கிலோ ரூ.90 க்கு விற்றது. நேற்று ரூ.30 அதிகரித்து, கிலோ ரூ.120 க்கு விற்பனையானது.

வியாபாரி ஒருவர் கூறுகையில்,'வெயிலின் தாக்கம் அதிகம் உள்ளது. இதனால் நீரின்றி மகசூல் குறைந்து விலை அதிகரித்துள்ளது',என்றார்.

## கொடைக்கானலில் நீண்ட நாட்களுக்கு பின் மழை

கொடைக்கானல்: கொடைக்கானலில் நீண்ட நாட்களுக்கு பின்னர் பெய்த மழையால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
கடந்த சில நாட்களாக மாறுபட்ட சீதோஷ்ணநிலை நிலவி வருகிறது. சுற்றுலா பயணிகள் பகல் நேரங்களில் நிலவும் ரம்யமான சூழலை ரசித்து செல்கின்றனர். சில நாட்களாக வானம் இருண்டு கருமேகம் சூழ்ந்து காணப்பட்டது. ஆனால் மழை பெய்யாமல் ஏமாற்றியபடி மேகங்கள் கலைந்து சென்றது.
இந்நிலையில் நேற்று மதிய நேரத்தில் பெய்த ஓரளவு மழையினால் அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். வெள்ளி நீர்வீழ்ச்சியில் பெய்த மழையால் அருவியில் நீர் வழிந்தோடியது. தொடர்மழை பெய்தால் குடிநீர் தேக்கங்களில் நீர்

நிரம்பி குடிநீர் தட்டுப்பாடு நிலவாமல் இருக்கும் சூழ்நிலை உள்ளது. செண்பகனூர், நாயுடுபுரம், சின்னப்பள்ளம் பகுதிகளில் பயிரிட்டுள்ள பாசன பயிர்களுக்கு இம்மழை பேருவுதவியாக இருக்கும் என அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

## கால்நடை தீவன சந்தை அமைக்க கோரிக்கை

கரூர்: கரூர் மாவட்டத்தில், க.பரமத்தியில் பிரதான தொழிலாக விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளது. இப்பகுதியில் மாடு, பசு, எருது, எருமை, வெள்ளாடு, செம்மறிஆடு, போன்ற கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். இதனால், தீவன பயிர்களான கம்பு ஒட்டுப்புல், கினியாபுல் மற்றும் பயறு வகையில் வேலிமால், குதிரைமசால், முயல்மசால், தீவன தட்டைபயிர் போன்றவை அதிகளவில் பயிரிடப்படுகிறது. எனவே, கால்நடைகளை விற்பனை செய்ய சந்தைகள் இருப்பதை போன்றே கால்நடை தீவனங்களை தயாரிக்கும் விவசாயிகளுக்கு ஏதுவாக தீவன சந்தை அமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கொப்பரை மார்க்கெட்டில் விலை சரிவால் விவசாயிகள்... கவலை தேங்காய் விளைச்சல் இருந்தும் பயன் இல்லை

போடி: மாவட்டத்தில் தேங்காய் விளைச்சல் அதிகம் இருந்தும் கொப்பரை மார்க்கெட்டில் விலை கடும் சரிவு காரணமாக, தென்னை விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் போடி, செங்குளம், குரங்கணி, கொட்டகுடி, அணைக்கரைப்பட்டி, கடமலைகுண்டு, கம்பம், உத்தமபாளையம், கூடலூர், வருஷநாடு தென்னை சாகுபடி அதிகம் உள்ளது. 45 நாட்களுக்கு ஒருமுறை தேங்காய் வெட்டப்படுகிறது. விளைந்த மரங்களில் 40 முதல் 60 காய்கள் வரை கிடைக்கும். கடந்த ஆண்டு பெரிய காய் ரூ.14 முதல் 16 வரையிலும், சிறிய காய் ரூ.10 முதல் ரூ.13 வரையிலும் கொள்முதல் செய்தனர்.

சில்லரையில் காய் ரூ.16 முதல் 20 வரை விற்பனை செய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஈரோடு, காங்கேயம், வெள்ளக்கோவில், திருச்சி, கேரளா பகுதியில் கொப்பரை மார்க்கெட்டில் தேங்காய் கிலோ ரூ.116 முதல் ரூ.120 வரை விலை இருந்தது. வெளி மார்க்கெட்டில் விலையும் அதிகரித்திருந்தது.

விலை குறைவு

தேங்காய் விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில் கடந்த 4 மாதங்களுக்கு முன் கொப்பரை தேங்காய் கிலோ ரூ.58 முதல் ரூ.59 வரை இருந்தது. ஒரு தேங்காய் ரூ.5.50 முதல் 7.50 வரை விவசாயிகளிடம் வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். ஏற்று கூலி, தேங்காய் உரிப்பது உள்ளிட்ட செலவுகள் சேர்த்து வியாபாரிகள் வெளி மார்க்கெட்டில் ரூ. 7 முதல் 8.50 வரை சில்லரை வியாபாரிகளுக்கு விற்பனை செய்தனர். தற்போது கொப்பரை மார்க்கெட்டில் ரூ.9 வரை விலை குறைந்து கிலோ ரூ.48 முதல் ரூ.49 வரை விற்பனையாகிறது. இதனால் விவசாயிகளிடம், வியாபாரிகள் ரூ. 4.50 முதல் 5.25 வரை கொள்முதல் செய்து, வெளி மார்க்கெட்டில் ரூ.6 முதல் ரூ.7 வரை விற்பனை செய்கின்றனர். சில்லரை வியாபாரிகள் ரூ.10 க்கு விற்பனை செய்கின்றனர்.

தவிப்பு

விவசாயிகள் கூறுகையில்,' கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் மழை இல்லாமல் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து தென்னை மரங்கள் வளர்ச்சியின்றி காய்ந்து, காய் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டது. அதனால் சில விவசாயிகள் தென்னை மரங்களை வெட்டி மாற்று விவசாயத்தை துவக்கினர். தற்போது பலத்த சூறாவளி காற்று வீசி வருவதால் நீண்ட நாட்களாக மரங்கள் வேரோடு சாய்ந்து கீழே விழுந்து வருகிறது. 4 மாதத்திற்கு முன் கொப்பரை தேங்காய் கிலோ ரூ.58 முதல் 59 வரை இருந்தது. வரத்து அதிகரிப்பால் தற்போது ரூ. 9 வரை விலை குறைந்து ரூ.49 ஆக உள்ளது. கொப்பரை தொடர் விலை சரிவு காரணமாக கண்ணீர் விடும் நிலையில் மாற்று விவசாயத்தில் ஈடுபட துவங்கியுள்ளனர், என்றனர்.

## மானியத்தில் சொட்டுநீர் பாசனம் பெற அழைப்பு

தேனி: மானியத்தில் சொட்டு நீர் பாசன திட்டத்தில் பயன்பெற ஆதிதிராவிட விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை அழைப்பு விடுத்துள் ளது.

தோட்டக்கலை சாகுபடியில் மாநில அளவில் தேனி மாவட்டம் 2வது இடம் வகிக்கிறது. இதற்கு காரணம் விவசாயிகள் நவீன தொழில் நுட்ப சாகுபடி முறைகளை கையாள்கின்றனர்.

இதில் சொட்டுநீர் பாசனம், நில போர்வை, பசுமை குடில் போன்ற தொழில் நுட்பங்கள் மகசூலை அதிகரிக்க உதவுகிறது. இந் நவீன வசதிகளுக்கு அரசு பல்வேறு வகையில மானியம் வழங்குகிறது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் சார்பில் மாவட்டத்தில் நுண்ணீர்பாசன திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் சிறு,குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசன வசதி செய்து தரப்படும்.

2015-2016ல் மாவட்டத்தில் தோட்டக்கலை சாகுபடி செய்யும் ஆதி திராவிட விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசன வசதிக்கு ரூ.92 லட்சம்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

176 எக்டேரில் இவ் வசதி செய்து தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை 30 எக்டேர் அளவிற்கே ஆதி திராவிட விவசாயிகள் வசதியினை பயன்படுத்தி உள்ளனர்.

எனவே அவர்கள் குறைந்தளவு நிலத்திலும் சொட்டு நீர் பாசன வசதி செய்யலாம். இதற்கு குறைந்த பட்சம் ரூ.18 ஆயிரம் முதல் ஒருலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது. இவ் வசதி பெற விரும்பும் ஆதிதிராவிட விவசாயிகள் நில வரைபடத்துடன், சிறு,குறு விவசாயிகளுக்கான சான்று, சிட்டா, அடங்கல், இரண்டு பாஸ்போர்ட் புகைப்படத்துடன் அந்தந்த பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர்களை அணுகி பயன்பெறலாம், என, கலெக்டர் வெங்கடாசலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வைகை அணையில் மழைநீர் வடிகால் கட்டும்பணி

தேவதானப்பட்டி: வைகை அணை கரையில் வெள்ளத்தடுப்பு நிவாரண நிதியில் மழைநீர் வடிகால் கட்டும்பணி நடந்து வருகிறது.

மாவட்டத்தில் வைகை அணை சுற்றுலாத்தலமாக விளங்குகிறது. பூங்கா, ரயில், யானை சருக்கல், நடன நீருற்று போன்ற பல்வேறு பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்துள்ளன. மூணாறு செல்லும் சுற்றுலாப்பயணிகள் வைகை அணை வந்து செல்கின்றனர். மேலும் வாரத்தின் அனைத்து நாட்களிலும் இவர்களின் வருகை இருக்கும். சனி, ஞாயிறு கிழமைகளில் அதிக கூட்டம் காணப்படும். அணையின் கரைப்பகுதி இரண்டு கிலோ மீட்டம் துாரம் உள்ளது. கரையை முறையாக பராமரிக்காததால் அது புதர்மண்டிக்கிடந்தது. அதன் பல்வேறு இடங்களில் அரிப்பு காணப்பட்டது. தற்போது வெள்ள நிவாரண நிதியின் மூலம் நுாறுக்கும் மேற்பட்ட இடங்களில் மழைநீர் வடிகால் கட்டும் பணி நடந்து வருகிறது.

மேலும் அணையின் கீழே மேற்கில் இருந்த புதர்கள் அகற்றப்பட்டு வேலி அமைக்கும் பணியும் நடக்கிறது. கரையில் இருந்த செடி, கொடிகள் அகற்றப்பட்டதால் கரை பார்ப்பதற்கு 'பளீச்' சென்று காணப்படுகிறது.

## பொட்டாஷ், டி.ஏ.பி., உரவிலை குறைப்பு

கம்பம்: பொட்டாஷ், டி.ஏ.பி.,உரங்களின் விலையை மத்திய அரசு அதிரடியாக குறைத்து உத்தரவிட்டுள்ளது. இதனால் ஏராளமான விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

உணவுப்பொருட்கள் உற்பத்தியை மேலும் அதிகரிக்க விவசாயத்திற்கு வழங்கப்படும் சலுகைகளை அதிகப்படுத்த மத்தியஅரசு திட்டமிட்டுள்ளது. அதன்ஒருபடியாக உரங்களின் விலையை குறைத்து அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

பொட்டாஷ் ஒரு மெட்ரிக் டன் ரூ. 16 ஆயிரத்தில் இருந்து ரூ 11 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல விவசாயிகள் அதிகம் பயன்படுத்தும் டி.ஏ.பி., உரம் ஒரு மெட்ரிக் டன் ரூ.25 ஆயிரத்தில் இருந்து ரூ.22 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த உத்தரவு ஜூலை 5ல் இருந்து அமலுக்கு வருவதாகவும் அறிவித்துள்ளது.

தேனி மாவட்ட வேளாண் அதிகாரிகள் கூறுகையில், 'பொட்டாஷ் மற்றும் டி.ஏ.பி .,உரங்களின் விலையை மத்திய அரசு குறைத்து உத்தரவிட்டுள்ளது. விவசாயிகள் உரக்கடைகளில் மேற்குறிப்பிட்ட குறைக்கப்பட்ட விலைகளில் உரங்களை வாங்கலாம். நெல், வாழை, திராட்சை, கொய்யா, மா, காய்கறி பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். இந்த விலை குறைப்பின் மூலம் விவசாயிகளுக்கு கணிசமான லாபம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது,' என்றனர்.

விவசாய சங்க பிரதிநிதிகள் கூறுகையில், 'உரங்களின் விலையை மத்திய அரசு குறைத்திருப்பது வரவேற்க கூடியது,'என்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### உணவு பொருட்கள் விலை 8.18 சதவீதம் அதிகரிப்பு



புதுடெல்லி: தொடர்ந்து 3வது மாதமாக கடந்த ஜூன் மாதத்திலும் மொத்த விலை பண வீக்கம் அதிகரித்துள்ளது. இந்த மாதத்தில் மொத்த விலை பண வீக்கம் 1.62 சதவீதம் உயர்ந்துள்ளது. இதில் உணவு பொருட்கள் விலை பண வீக்கம் 8.18 சதவீதம் உயர்ந்துள்ளது. பழம், காய்கறி, உணவு தானியங்கள், புரதம் நிறைந்த உணவு பொருட்கள் விலை எகிறியதே இதற்கு காரணம்.

காய்கறிகள் விலை 16.91 சதவீதம் உயர்ந்துள்ளது. பருப்பு வகைகள் 26.61 சதவீதமும், உருளைக்கிழங்கு அதிகபட்சமாக 64.48 சதவீதம் உயர்ந்துள்ளன. கடந்த மாதத்தில் சில்லரை விலை பண வீக்கம் 577 சதவீதம் உயர்ந்திருந்த நிலையில், மொத்த விலை பண வீக்கமும் அதிகரித்துள்ளது.

## நாமக்கல்லுக்கு ஒடிசாவிலிருந்து 2,700 டன் ரேசன் அரிசி வருகை

நாமக்கல், : நாமக்கல் மாவட்டத்தில் 1,200க்கும் மேற்பட்ட ரேசன் கடைகள் மூலம் அரிசி, சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட பல்ேவறு பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்துக்கு ஒடிசாவில் இருந்து ரேசன் அரிசி கொண்டு வரப்படுகிறது. இந்நிலையில், நேற்று காலை ஒடிசாவில் இருந்து 2,700 டன் ரேசன் அரிசி ரயில் மூலம் வந்தது. 40 வேகன்களில் வந்த அரிசி மூட்டைகளை, லாரிகளில் ஏற்றும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டனர். பின்னர், அரிசி மூட்டைகள் யாவும் திருச்சி ரோட்டில் உள்ள குடோனுக்கு பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டது. இதனால் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி ரேசன் அரிசி கிடைக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் சூரியகாந்தி, எள் சாகுபடி பயிற்சி

நாமக்கல், : நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் சூரியகாந்தி, எள் மற்றும் ஆமணக்கு சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த பயிற்சி நடக்க உள்ளது.இதுகுறித்து, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தின் இணைபேராசிரியர் அகிலா கூறியதாவது: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் இம்மாதம் 19ம் தேதி காலை 9 மணிக்கு 'சூரியகாந்தி, எள் மற்றும் ஆமணக்கு சாகுபடியில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை' என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி நடக்கிறது.

இப்பயிற்சியில் மண் மற்றும் பாசன நீர் ஆய்வின் முக்கியத்துவங்கள், மண் மற்றும் பாசன நீர் மாதிரி எடுக்கும் முறைகள், ஒருங்கிணைந்த முறையில் ஊட்டச்சத்து நிர்வாகம், உரமிடும் முறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இதில் ஆர்வமுள்ள அனைவரும் பங்கேற்கலாம்.விருப்பமுள்ளவர்கள் நாமக்கல்-மோகனூர் சாலையில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வரலாம். 18ம் தேதிக்குள் பெயரை கண்டிப்பாக முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வேளாண் நிலையத்தில் மஞ்சளில் நோய் தடுப்பு பயிற்சி முகாம் நாளை நடக்கிறது

நாமக்கல், : நாமக்கல் வேளாண் நிலையத்தில் மஞ்சள் நோய் தடுப்பு பயிற்சி முகாம் நாளை நடக்கிறது.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நாளை 15ம் தேதி காலை 9 மணிக்கு, மஞ்சளில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடைபெறுகிறது. இதில் கிழங்கு நேர்த்தி, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அறுவடைக்கு பின் விதை சேமிப்பு போன்றவை பற்றிய பயிற்சி அளிக்கப்படும். முகாமில் விவசாயிகள், பண்ணையாளர்கள், கிராமப்புற பெண்கள், இளைஞர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பம் உள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என வேளாண் அறிவியல் நிலைய திட்ட தலைவர் அகிலா தெரிவித்துள்ளார்.

## தர்மபுரி பகுதியில் சின்னவெங்காயம் விளைச்சல் அதிகரிப்பால் விலை சரிவு

தர்மபுரி, : தர்மபுரி மாவட்ட சந்தைகளில் சின்னவெங்காயம் விளைச்சல் அதிகரிப்பால் கிலோ ரூ.24 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் பெரம்பலூர், திருச்சி, ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் சின்னவெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. சோகத்தூர், அதகப்பாடி, இண்டூர், பாப்பாரப்பட்டி, அக்ரஹாரம், பென்னாகரம், நல்லம்பள்ளி, பாலக்கோடு உள்ளிட்ட பகுதிகளில் 300 ஏக்கருக்கு ே◌மல் சின்ன ெ◌வங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது.

மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் சின்னவெங்காயம் பதப்படுத்தி உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. சேலம், கோவை, கிருஷ்ணகிரி மாவட்ட வியாபாரிகள் நேரில் வந்து மொத்தமாகவும் வாங்கி செல்கின்றனர். சின்ன வெங்காயம் விலை கடந்த ஒரு மாதமாக உச்சத்தில் இருந்து வந்தது. தற்போது மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருவதால், சின்னவெங்காயம் அறுவடை பணி நடக்கிறது. இதனால் மார்க்கெட்டிற்கு சின்ன வெங்காயம் வரத்து அதிகரித்தால் விலை சரிந்துள்ளது. கடந்த மாத்திற்கு முன்பு ஒரு கிலோ சின்ன

வெங்காயம் ரூ.36க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது விலை சரிந்து நேற்று ரூ.24 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்பட்டது.

இதுகுறித்து தினசரி மார்க்கெட் வியாபாரிகள் கூறுகையில், அறுவடை செய்யப்பட்ட சின்னவெங்காயம் பதப்படுத்தி உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த காலத்தில பெங்களூரு சந்தையில் இருந்து சின்னவெங்காயம் விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது அந்த நிலை மாறி, தர்மபுரி மாவட்டத்தில் விளையும் சின்ன வெங்காயத்தை அதிகம் பயன்படுத்த தொடங்கியுள்ளோம். ஐந்து உழவர் சந்தை, தினசரி சந்தைகளில் நேற்று 2 டன்னுக்கு மேல் சின்ன வெங்காயம் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றார்.

## மாவட்டம் முழுவதும் சீசனுக்கு முன்பாகவே சாமந்தி பூ பறிப்பு துவக்கம்

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் சீதோஷ்ணநிலை மாற்றத்தால் சீசனுக்கு முன்பாகவே சாமந்தி பூ பறிப்பு பணி துவங்கியுள்ளது. கிலோ ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் தொப்பூர், நல்லம்பள்ளி, தர்மபுரி, மாரண்டஅள்ளி, பொம்மிடி, பாலக்கோடு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 300 ஏக்கரில் சாமந்தி பயிரிட்டுள்ளனர்.

விநாயகர் சதுர்த்தி, தசரா, ஆயுத பூஜை பண்டிகையை எதிர்நோக்கி சாகுபடி ெ◌சய்துள்ளனர். 6 மாதத்தில் இருந்து பூ பறிப்புக்கு வருகிறது. ஒரு ஏக்கருக்கு 4 டன் முதல் 6 டன் வரைக்கும் மகசூல் கொடுக்குகிறது. இந்நிலையில், சீதோஷ்ணநிலை மாற்றத்தால் சில இடங்களில் தற்போது சாமந்தி மகசூலுக்கு வந்துள்ளது. சீசன் சமயங்களில் கிலோ ரூ.30 முதல் ரூ.40க்கு விற்பனை செய்யப்படும். தற்போது, ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.70 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. தொடர்ந்து பண்டிகைகள் வர உள்ளதால் பூக்களின் விலை மேலும் உயரும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு பதிவு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு 31ம் தேதி கடைசி நாள்

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டம் கோபாலபுரம் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு பதிவு நிறைவு செய்ய விவசாயிகளுக்கு நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.தர்மபுரி மாவட்டம் கோபாலபுரம் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாக இயக்குனர் கவிதா வெளியிட்டுள்ள அறிக்கை, கடந்த 2015- 16ம் ஆண்டிற்கான அரவைப் பருவத்தில் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 1.98 லட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரவை செய்து முடிக்கப்பட்டது. மேலும் சர்க்கரைக் கட்டுமானம் தமிழகத்திலேயே முதலாவதாக 9.95 சதவிகிதம் ஈட்டப்பட்டுள்ளது.

வரும் 2016-17ம் ஆண்டிற்கான கரும்பு அரவைப்பருவம், நவம்பர் மாதத்தில் துவங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 2016- 17 அரவை பருவம் நவம்பர் முதல் வாரத்தில் துவங்கி 4.30 லட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே அங்கத்தினர்கள் தாங்கள் இதுவரை நடவு செய்துள்ள கரும்பு பரப்பு முழுவதையும் இம்மாதம் 31ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஆலை நன்கு இயங்கவும், எதிர்வரும் 2016-17 அரவை பருவத்தில் முதிர்ச்சியடைந்த கரும்பை அரவைப் பருவம் முழுவதும் ஒரே சீராக அரவை செய்ய எற்றவாறு, ஒவ்வொரு மாதமும் திட்டமிட்டு கரும்பு நடவு மேற்கொள்ளப்பட்டது. எனவே 31.7.2016க்கு பிறகு ஆலையின் அனுமதியுடன் நாற்றங்கால் கரும்பு நடவு மட்டும் மேற்கொள்ளவும். ஆலை அரவைக்கு கரும்பு நடவு செய்வதை ஆலை விவசாய அங்கத்தினர்கள் நிறுத்தம் செய்யவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. 31.7.2016 வரை நடவு செய்த கரும்பு முழுவதையும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் பதிவு செய்து முடிக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஆதி திராவிட விவசாயிகளுக்கு நுண்ணீர்பாசனம் அமைக்க 100 சதவீத மான்யம்

கரூர், : கரூர் மாவட்ட ஆதி திராவிட விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை மூலம் நுண்ணீர்பாசனம் அமைக்க மான்யம் வழங்கப்படுவது. இது குறித்து கலெக்டர் காகர்லா உஷா விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

கரூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் நடப்பு (2015- 16) ஆண்டில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனம் அமைக்கும் பணி பிரதம மந்திரி கிரிஷ் சஞ்சய் யோஜனா என்ற புதிய திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ளது. மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிட விவசாயிகளின் வயல்களில் தோட்டக்கலைப் பயிர்களுக்கு நுண்ணீர் பாசனம் அமைக்க மொத்தம் 106 ஹெக்டேர் பரப்பிற்கு மான்யம் வழங்க ரூ.72.54 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது.

இதில் 72.42 ஹெக்டேர் பரப்பிற்கு ரூ.55.708 லட்சம் நிதிக் குறியீட்டில் ஆதி திராவிட சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மான்யத்தில் நுண்ணீர் பாசனம் அமைக்க வழிகாட்டு நெறிமுறைகள் பெறப்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயிகளுகக்கு 100 சதவீத மான்யத்திற்கு குறைந்த பட்சமாக ரூ.23,500 மான்யம், அதிகபட்சமாக ரூ.1லட்சத்து 93 ஆயிரத்து 500ம் மான்யமாக வழங்கப்படவுள்ளது.

இதர ஆதி திராவிட விவசாயிகளுக்கு 75 சதவீத மான்யத்திற்கு கரூர் மாவட்டத்திற்கு 18.11 ஹெக்டேருக்கு ரூ.13.27 லட்சம் மான்யமாக வழங்க நிதி பெறப்பட்டுள்ளது. இதில் குறைந்த பட்சமாக ரூ.17,625 மான்யமும், அதிகபட்சமாக ரூ.3லட்சத்து 71ஆயிரத்து 550ம் மான்யமாக வழங்கப்படவுள்ளது.இதே போல் நடப்பு ஆண்டில் தெளிப்பு நீர் பாசனத்திற்கு ஆதி திராவிட சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மான்யத்திற்கு 12.60 ஹெக்டேருக்கு 2.322 நிதி பெறப்பட்டுள்ளது. 1 ஹெக்டேருக்கு மான்யம் ரூ.31,600 வழங்கப்படவுள்ளது.

மேலும் இதர ஆதி திராவிட விவசாயிகளுக்கு 75 சதவீத மான்யத்தில் 3.16 ஹெக்டேருக்கு 0.580 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதில்

குறைந்தபட்சமாக ரூ.23,700ம் மான்யமாக வழங்கப்படவுள்ளது. தெளிப்பு நீர் பாசனம் அமைக்கவும் வழக்கம் போல சிறு, குறு விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேர் முதல் 2 ஹெக்டேர் வரையும் இதர விவசாயிகளுக்கு 5 ஹெக்டேர் வரையும் மானியம் வழங்கப்படவுள்ளது.

எனவே கரூர் மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை பயிர்களான பழப்பயிர்கள், காய்கறிப் பயிர்கள், பூக்கள், மூலிகை பயிர்கள் மற்றும் தென்னையில் ஊடுபயிராக கோக்கோவிற்கு சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க விரும்பும் ஆதி திராவிட விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் தங்கள் பகுதி வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலர்களை அணுகிப் பயன் பெற வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பாசனத்துக்காக பேச்சிப்பாறை அணையில் இருந்து 400 கன அடி தண்ணீர் திறப்பு



குமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வந்த சாரல் மழை சற்று ஓய்ந்தது. நேற்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் பாலமோர் பகுதியில் மட்டும் 5.2 மி.மீ. மழை பதிவாகி இருந்தது. மற்ற இடங்களில் மழை எதுவும் பதிவாகவில்லை. இருப்பினும் அணைகளுக்கு தண்ணீர் வரத்து இருந்து வருகிறது.

பேச்சிப்பாறை அணைக்கு 211 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 340 கன அடி தண்ணீரும், மாம்பழத்துறையாறு அணைக்கு 2 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறது. பேச்சிப்பாறை அணை திறக்கப்பட்டபிறகு ஒருசில தினங்கள் மட்டுமே அணையில் இருந்து தண்ணீர் விடப்பட்டது. அதன்பிறகு அணை மூடப்பட்டது. இந்தநிலையில் நேற்று காலையில் இருந்து மீண்டும்

பேச்சிப்பாறை அணையில் இருந்து பாசனத்துக்காக 400 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. பெருஞ்சாணி அணையில் இருந்து 786 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மாம்பழத்துறையாறு நிரம்பியிருப்பதால் அந்த அணைக்கு வரும் 2 கன அடி தண்ணீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது.

## கோத்தகிரி பகுதியில் மகசூல் பாதிப்பு: தேயிலை செடிகளை கவாத்து செய்யும் விவசாயிகள்



கோத்தகிரி,

கோத்தகிரி பகுதியில் பச்சை தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் கவாத்து செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தேயிலை விவசாயம்

கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. ஏராளமான விவசாயிகள் தேயிலை விவசாயத்தை நம்பி உள்ளனர். தேயிலை விவசாயத்துக்கு மழையும், வெயிலும் மாறி, மாறி நிலவ வேண்டும். இது போன்ற கால நிலை நிலவினால் மகசூல் அதிகமாக இருக்கும்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கோத்தகிரி பகுதியில் மழை பெய்வதுடன், மேக மூட்டமும் காணப்படுகிறது. மேலும் பலத்த காற்றும் வீசுகிறது. இதனால்

காற்றில் ஈரப்பதம் அதிகமாக உள்ளதால் தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் தேயிலை செடிகளை நோய்கள் தாக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

<u>கவாத்து</u>

மகசூல் பாதிக்கப்பட்டு வருவதால், விவசாயிகள் தங்களது தோட்டங்களில் உள்ள தேயிலை செடிகளை கவாத்து செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இது குறித்து எஸ்.கைகாட்டி பகுதியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது:–

கோத்தகிரி பகுதியில் நிலவும் சீதோஷ்ண நிலை காரணமாக பச்சை தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது. இதை கருத்தில் கொண்டு தற்போது தேயிலை செடிகளில் மேல் பகுதியை மட்டும் கவாத்து செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

இவ்வாறு கவாத்து செய்வதால் ஒரு மாதத்தில் மீண்டும் தேயிலை செடிகளில் கொழுந்து இலைகள் வளரத்தொடங்கி விடும். இதனால் மீண்டும் பச்சை தேயிலை மகசூல் அதிகரிக்கும். மேலும் தரமான பச்சை தேயிலை பறிக்கப்பட்டு, நல்ல விலை கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் விழா



தா.பேட்டை வட்டார பகுதிகளை சேர்ந்த எம்.புதுப்பட்டி, வாளவந்தி, மங்களம், சிட்டிலரை ஆகிய கிராமங்களில் தேசிய உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் துவரை

தொழில்நுட்ப தொகுப்பு சாகுபடி 100 ஹெக்டர் பரப்பில் செயல் விளக்கம் அமைக்கப்பட உள்ளது. இந்த திட்டத்தில் பயனாளிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் விழா தா.பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் தலைமை தாங்கி பேசினார். வேளாண்மை உதவி இயக்குனர் செல்வம் வரவேற்றார். இதில் துவரை 5 கிலோ, டிரைக்கோடெர்மா விரிடி 2.5 கிலோ, பயறுநுண்சத்து 5 கிலோ, திரவ உயிர் உரம் 1 லிட்டர் ஆகிய இடுபொருட்களை செயல்விளக்க விவசாயிகளுக்கு வழங்கி, துவரை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் நாகராஜன், துணை வேளாண்மை அலுவலர் பிரபாகரன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் வரகுணபாண்டியன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

**தமிழக பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவேண்டும்!**




மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சில் கூட்டம் அதாவது, முதல்–மந்திரிகளின் மாநாடு நாளை டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடக்கிறது. இந்த மாநிலங்களுக்கிடையேயான கவுன்சில் என்பது அரசியல்சட்டத்தின் 263–வது பிரிவின்படி, கடந்த 1990–ம் ஆண்டு மே 28–ந் தேதி ஜனாதிபதி பிறப்பித்த ஒரு உத்தரவின்மூலம் அமைக்கப்பட்டது. இந்தியா ஒரு கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையில் நிர்வகிக்கப்படும் நாடாகும். மாநிலங்களில் அந்தந்த

மாநிலங்களுக்கு உட்பட்ட சட்டசபை தேர்தலில் வெற்றிபெற்ற கட்சி ஆளுகிறது. அதுபோல, நாடுமுழுவதும் நடக்கும் பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெறும் கட்சி மத்தியில் ஆளுகிறது. ஆக, ஒரு வளையும் தன்மையுடைய அரசியல் சட்டத்தோடு இந்தியா கூட்டாட்சியாக இயங்குகிறது. அந்த தத்துவத்தை வலுப்படுத்தும் வகையில், மாநிலங்களின் முதல்–மந்திரிகளை உறுப்பினர்களாக கொண்ட மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சில் கூட்டத்தைக்கூட்டி பிரதமர் பல முக்கிய பிரச்சினைகளை விவாதிப்பது வழக்கம்.

தற்போது இந்த கவுன்சிலில் அனைத்து மாநில முதல்–மந்திரிகளும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதுபோல, மத்திய உள்துறைமந்திரி ராஜ்நாத்சிங், வெளியுறவுத்துறை மந்திரி சுஷ்மா சுவராஜ், நிதிமந்திரி அருண்ஜெட்லி, ஊரகவளர்ச்சி, செய்தி ஒலிபரப்புத்துறை மந்திரி வெங்கையாநாயுடு, சாலைபோக்குவரத்துத்துறை மந்திரி நிதின்கட்காரி, ராணுவமந்திரி மனோகர் பாரிக்கர் ஆகியோர் நியமன உறுப்பினர்களாக உள்ளனர். இதுதவிர, 11 முக்கியத்துறைகளை வைத்திருக்கும் மந்திரிகள் நிரந்தர அழைப்பாளர்களாக இருக்கிறார்கள். இதுவரையில் 10 கூட்டங்கள் நடந்திருக்கின்றன. கடந்த கூட்டம் 2006–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9–ந் தேதி அப்போது பிரதமராக இருந்த மன்மோகன் சிங் தலைமையில் நடந்தது. இப்போது 11–வது கூட்டத்தை நரேந்திர மோடி கூட்டியிருக்கிறார். இந்தக்கூட்டத்தில் மாநிலங்களுக்கு இடையேயான உறவுகள், விவகாரங்கள், பிரச்சினைகள், உள்நாட்டு பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் சமூகதிட்டங்கள் விவாதிக்கப்பட இருக்கின்றன.

இதுதவிர, பள்ளிக்கூடகல்வி, மானியங்களை நேரடியாக வங்கிக்கணக்கில் செலுத்துவது, ஆதார்அட்டை, சிறந்த நிர்வாகம், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மீது இழைக்கப்படும் கொடுமைகள் போன்ற பலவிஷயங்கள் விவாதிக்கப்பட இருக்கின்றன. இந்த முதல்–மந்திரிகள் மாநாடு இதுபோன்ற பலவிஷயங்களை விவாதித்து, மத்திய அரசாங்கத்துக்கு எதை எதை நிறைவேற்றவேண்டும், எதற்கெல்லாம் முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பது போன்ற விவகாரங்களை பரிந்துரையாக அளிக்கும். தமிழக அரசை பொறுத்தவரையில், எவ்வளவோ விவகாரங்கள் மத்திய அரசாங்கத்தால்

தீர்க்கப்பட வேண்டியதாக இருந்தாலும், மாநிலங்களுக்கிடையேயான உறவுகள் என்று வரும்போது, நமது அண்டை மாநிலங்களோடு நதிநீர் பிரச்சினைதான் முக்கியமாக தீர்க்கப்பட வேண்டியதாக இருக்கிறது. மூன்று அண்டை மாநிலங்கள் இருக்கின்றன. மூன்று மாநிலங்களோடும் நதிநீர்தான் பிரச்சினை. கர்நாடகத்தோடு காவிரிநீர் பிரச்சினை, ஆந்திராவோடு பாலாறு தடுப்பணைகட்டும் விவகாரம், கேரளாவோடு முல்லைப்பெரியாறு அணை பிரச்சினை ஆகியவைதான் இருக்கிறது. தாயாய், பிள்ளையாய் பழகும் இந்த மூன்று மாநிலங்களோடு உள்ள இந்த மூன்று பிரச்சினைகளுக்கும் மத்திய அரசாங்கம் தலையிட்டு தீர்வுகண்டுவிட்டால் நட்புறவு தழைக்கும்.

கர்நாடகத்தை எடுத்துக்கொண்டால், காவிரிநீர் மேலாண்மை வாரியம், காவிரிநீர் ஒழுங்குபடுத்தும் குழு அமைக்கவேண்டும் என்பது நடுவர் தீர்ப்பாயத்தின் உத்தரவு. அதை நிறைவேற்றிவிட்டாலே, அங்குள்ள பிரச்சினைகள் தீர்ந்துவிடும். பாலாறை பொறுத்தமட்டில், 1892–ல் சென்னை மாகாணத்துக்கும், மைசூரு அரசாங்கத்துக்கும் கையெழுத்தான ஒப்பந்தத்தின்படி, காவிரி, பாலாறு உள்பட 15 ஆறுகளின் மேல்பகுதியில் ஏற்கனவே உள்ள நீர்த்தேக்க பகுதிகளின் உயரத்தையும், பரப்பளவையும் பராமரிப்பு என்ற பெயரில் அதிகரிக்கக்கூடாது. கீழ்பகுதிகளில் உள்ள மாநிலங்களின் அனுமதியில்லாமல், புதிய அணை கட்டுவதோ மற்றும் தண்ணீரை தேக்கிவைப்பதற்கான எந்த வித முயற்சியிலோ ஈடுபடக்கூடாது என்று தெளிவாக இருக்கிறது. அதைமீறி இப்போது பாலாறில் புதிதாக தடுப்பணைகள் கட்டப்பட்டும், ஏற்கனவே உள்ள தடுப்பணைகளின் உயரங்கள் அதிகரிக்கப்பட்டும் வருகிறது. இதுபோல, முல்லைபெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்தவேண்டும். அங்கு மத்திய போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்ற கோரிக்கையும் நிலுவையில் உள்ளது. பிரதமர் தலைமையில் நடக்கும் இந்த கூட்டம், தமிழகத்தின் இந்த பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வுகாணும் வகையில் அமைந்தால்தான், கூட்டத்தின் நோக்கம் தமிழ்நாட்டை பொறுத்தளவில் நிறைவேறியதாக இருக்கும்.

**கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறப்பது காலதாமதமாகும்**



ஊத்துக்கோட்டை

கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறப்பது மேலும் காலதாமதமாகும்.

<u>கண்டலேறு அணையில் இருந்து</u>

சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி ஏரிக்கு ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து ஆண்டு தோறும் 12 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விட வேண்டும் என்பது ஒப்பந்தம் ஆகும். இதில் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 8 டி.எம்.சி. தண்ணீரும், ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 4 டி.எம்.சி. தண்ணீரும் கிருஷ்ணா கால்வாய் மூலம் கிடைக்க வேண்டும்.

ஆனால் கடந்த டிசம்பர் மாதம் சென்னையில் பெய்த கனமழை காரணமாக ஏரி, குளங்கள் நிரம்பி வழிந்ததால் அப்போது தமிழகத்துக்கு தண்ணீர் தேவைப்படவில்லை. இதனால் ஜனவரி மாதம் கிருஷ்ணா தண்ணீர் திறந்து விடப்பட வில்லை.

காலதாமதம்

ஆனால் இப்போது பூண்டி ஏரியில் 850 மில்லியன் கனஅடி தண்ணீர்தான் உள்ளது. இதனால் பூண்டி ஏரிக்கு கிருஷ்ணா தண்ணீரை திறந்து விடுமாறு தமிழக அரசு சார்பில் ஆந்திர அதிகாரிகளுக்கு கடிதம் எழுதப்பட்டிருந்தது. ஆனால் கிருஷ்ணா தண்ணீர் எப்போது திறந்து விடப்படும் என்பதை ஆந்திர அரசு இதுவரை அறிவிக்காமல் உள்ளது. கண்டலேறு அணையில் 18 டி.எம்.சி. தண்ணீர் இருந்தால் மட்டுமே கிருஷ்ணா கால்வாயில் தண்ணீர் திறந்து விட முடியும்.

ஆனால் இப்போது கண்டலேறு அணையில் 25 டி.எம்.சி. அளவுக்கு தண்ணீர் உள்ளது. இருப்பினும் தண்ணீர் திறக்காமல் உள்ளனர். நெல்லூர் மாவட்டத்தில் போதிய அளவு மழை பெய்யாததாலும் கண்டலேறு அணைக்கு நீர்வரத்து இல்லாததாலும் தண்ணீர் திறக்கவில்லை என்று ஆந்திர அதிகாரிகள் கூறுகிறார்கள். இதனால் ஜூலை மாதம் பூண்டி ஏரிக்கு கிடைக்க வேண்டிய கிருஷ்ணா தண்ணீர் வருவது மேலும் காலதாமதம் ஆகும் என தெரிகிறது.